1993 ஏப்ரல் 1]

நல்ல நிர்வாகம் செய்யப்பட்டு, இன்றைக்கு ஓரளவு லாபங்களில் இயங்கி வருகிறது. அந்த லாபத்தை ஈட்டித் தரக்கூடிய சிறந்த பணியாளர்கள்தான் இனி பதவி உயர்வு பெற முடியும் என்றும் அரசு அவர்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறது. எனவே, இதுபோன்ற கருத்துக்களை அரசு கனிவோடு பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10.50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 216, திருமதி ரமணி நல்லதம்பி, இருக்கையில் இல்லை.

வினா எண். 217, திரு. கே. ஏ. மனோகரன், இருக்கையில் இல்லை.

வினா எண். 218, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

218—

மருத்துவப் பட்டப்படிப்பு முடித்த ஆதிதிராவிட இன மருத்துவர்களுக்கு மருத்துவமனைக் கட்ட தாட்கோ மூலம் கடன் வழங்கல்.

*9901—டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவப் பட்டப்படிப்பு முடித்த ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்த மருத்துவர்களுக்குச் சொந்தமாக மருத்துவ மனை கட்டிக் கொள்ள தாட்கோ மூலம் கடன் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தனி நபர் தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ், படித்த வேலையல்லாத மருத்துவர்கள் ரூ. 5.00 இலட்சம் வரையில் கடன் பெற்று மருத்துவமனை கட்டிக் கொள்ளலாம். இதில் ரூ. 15,000 தாட்கோ மானியமாகவும், ரூ 85,000 அல்லது திட்ட மதிப்பீட்டில் 20 சதவீதம் இதில் எது குறைவோ அத்தொகை தாட்கோ விளிம்புக் கடன் தொகையாகவும், மீதி வங்கிக் கடனாகவும் வழங்கப்படுகிறது.

[1993 ஏப்ரல் 1

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலையில்லாத ஆதிதிராவிட மருத்துவ பட்டதாரிகளுக்கு தனியாக மருத்துவமனை தொடங்க தாட்கோ நிறுவனம் மூலம் கிட்டத்தட்ட 5 லட்ச ரூபாய் அளிப்பதாகவும், அதில் 15 ஆயிரம் ரூபாய் மானியமாகவும், கிட்டத்தட்ட 85 ஆயிரம் ரூபாய் மார்ஜின் மணியாகவும் பணம் தந்து அவர்கள் தொழில் தொடங்க ஆவன செய்திருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். பெரும்பாலும், மனை வைத்திருப்பவர்களுக்குத்தான், இந்தத் திட்டம் செயல்படக்கூடிய, பயன் அளிக்கக் கூடிய நிலையில் இருக்கிறது. ஆனால் மனை இல்லாத மருத்துவர்களுக்கு இந்தத் திட்டத்தை அனுபவிக்கின்ற நிலை இல்லாத காரணத்தால், ஆதிதிராவிட மருத்துவர்களுக்கு இடம் வாங்க, தாட்கோ மூலம் கடன் உதவி பெற அரசு ஆவன செய்யுமா, மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடன் பெறும் மனுதாரர்கள் இடத்தையும் சேர்த்து திட்ட மதிப்பீட்டைத் தயார் செய்து, அந்த திட்ட மதிப்பீடு 5 லட்சத்திற்கு மேற்கொண்டு சென்றால், தாட்கோ மூலம் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பல மருத்துவப் பட்டதாரிகளை இந்தச் சட்ட மன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக ரிசர்வ் தொகுதியாக உள்ள அத்தனை தொகுதிகளுக்கும் டாக்டர்களையே சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ரிசர்வ் தொகுதியில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தாட்கோ நிறுவனத்தின் மூலம் மருத்துவமனைகள் கட்ட வழிவகை இருக்கிறதா ? ஒரு வேளை 'ஆபிஸ் ஆப் பிராபிட் என்ற நிலை இருப்பினும் மானியத்தைத் தவிர்த்து, மார்ஜின் மணி வழங்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில், ஏழை எளிய மக்கள்,வாழ்க்கைத் தரத்தில் முன்னேற முடியாதவர்களுக்கு கடன் கொடுப்பதற்காக இந்தத் திட்டம் இருக்கிறது. ஆகையினால் சட்டமன்ற உறுப்பினர்கள் மானியம் அல்லாத கடனை அரசு உதவி இல்லாமலேயே வங்கிகளில் பெற்றுக் கொள்ளலாம்

1993 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. வேலையா.

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ மூலம் கடன் பெறுவதில், பொதுத்துறை வங்கிகள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால், பொதுத் துறை வங்கிகளைப் பொறுத்த வரையில், கடன் கொடுப்பதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள், காலத்தைக் கடத்துகிறார்கள். அரசாங்கத்திலிருந்து பெறுகிற சப்சிடியை டெபாசிட்டாக வைத்துக் கொண்டு, நீண்டகாலம் வரை அந்த மனுவை வைத்திருந்து, பிறகு கடைசியில் கடன் இல்லை என்று சொல்வதால், அரசாங்கத்திலிருந்து கொடுத்த பணத்தை அவர்கள் வைத்துக் கொள்வதோடு பிறகு அந்தப் பணத்தைப் பயன்படுத்த முடியாமலே போய்விடுகிறது. இதை நான் பலமுறை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் பேசியும், வங்கி அதிகாரிகளிடம் முறையிட்டும் எந்தவிதமான பதிலும் கிடைப்பதில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நமது அரசின் மூலமாக மத்திய அரசை அணுகி, அதற்கு நிரந்தரமான தீர்வை ஏற்படுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கருத்துக்களை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 219, திரு. ஏ. ரவிக்குமார், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

219—

பழவேற்காடு பகுதியில் இறால் மீன் ஏற்றுமதி நிறுவனம்.

*15997—திரு. ஏ. ரவிக்குமார் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, பழவேற்காடு பகுதியில் மீனவர்கள் பிடிக்கின்ற இறால் மீன்களை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசு அங்கு ஏற்றுமதி நிறுவனம் (Exp rt Company) துவங்குவதற்கு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?